# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
## FAST TRACK COURT AT MAGISTERIAL LEVEL, PATTUKKOTTAI

| | |
|---|---|
| **STC. No.** | **80/2024** |
| **பெயர்:** | **பிரகாஷ் -DW1 Chief** |
| **தந்தை பெயர் :** | **ஜெயசந்திரன்** |
| **வயது:** | **36/2026** |
| **ஊர்:** | **கூத்தாடிவயல்** |
| **தாலுக்கா** | **பட்டுக்கோட்டை** |
| **வேலை** | **விவசாயம்** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of **27th day of August 2026**

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் 12.57 PM**

**புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலரான திருமதி. Usha (Assistant) என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

1. புகார்தாரரை எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால், 3 வருடங்களாக தெரியும். எப்படி தெரியும் என்றால், முத்து என்பவர் மூலமாக தெரியும். 3 வருடம் என்றால் 2023-லிருந்து தெரியும் என்று சொன்னால் சரியாக இருக்குமா என்றால், சரியாக இருக்கும், 2023க்கு முன்பாக எனக்கு தெரியாது என்றால், சரிதான்.
2. நானும் புகார்தாரரும் 15 ஆண்டுகள் நண்பர் என்று சொன்னால், சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் நான் தான் உள்ளேன் என்றால், சரிதான்.அந்த புகைப்படத்தில் நான், புகார்தாரருக்கு பிப்ரவரி 2022 ஆம் ஆண்டு புகார்தாரர் கல்யாணத்திற்கு கல்யாண Flex வைத்தது என்று சொன்னால், சரிதான். அந்த ஆவணம் **EX-P6** ஆக குறியீடுசெய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் புகைப்படமானது புகார்தாரர் மற்றும் அவரது மனைவியுடன் கல்யாணத்தின்போது எடுத்த புகைப்படம் என்று சொன்னால், சரிதான். அந்த ஆவணம் **EX-P7** ஆக குறியீடுசெய்யப்படுகிறது. பொதுவாக திருமணத்திற்கு Flex வைத்தால் நெருக்கமான நண்பர்கள்தான் வைப்பார்கள் என்றால், சரிதான்.

அதனால், புகார்தாரர் எனக்கு நெருங்கிய நண்பர் என்று சொன்னால், சரியல்ல.

3. இவ்வழக்கை தவிர சமூக நீதிமன்றத்தில் எனக்கு எதிராக எத்தனை வழக்கு உள்ளது என்றால், 1 வழக்கு தான் உள்ளது, அந்த வழக்கின் எண் தெரியாது, ஆனால் அந்த வழக்கின் புகார்தாரர் ஷேக் முகமது ஆவார். அந்த வழக்கின் எண் STC 175/2025 என்று சொன்னால், எனக்கு சரியாக தெரியவில்லை. காசோலை மோசடி வழக்கை தவிர்த்து என் மீது ஏதேனும் குற்ற வழக்கு இருக்கிறதா என்றால், இல்லை. என் மீது 10 க்கும் மேற்பட்ட குற்ற வழக்குகள் உள்ளது என்று சொன்னால், சரியல்ல.

4. புகார்தாரர் அனுப்பிய சட்ட அறிவிப்பை பெற்றேனா என்றால், பெற்றேன். அந்த அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு அனுப்பினேனா என்றால், இல்லை, புகார்தாரரிடம் கேட்டேன், அதற்கு புகார்தாரர் முத்துவிற்கு அனுப்ப வேண்டிய நோட்டீஸை எனக்கு தவறுதலாக அனுப்பிவிட்டதாக கூறினார். நான் புகார்தாரர் அனுப்பிய சட்ட அறிவிப்பை பெற்றுக்கொண்டு, புகார்தாரரிடம் தொடர்பு கொள்ளவில்லை என்று சொன்னால், சரியல்ல, நான் தொடர்பு கொண்டேன். நான் தொடர்பு கொண்டேன் என்று வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல.

5. பொதுவாக காசோலையில் கையொப்பம் இடமால் கொடுத்தால், அந்த காசோலை செல்லுபடியாகுமா என்றால், செல்லுபடியாகாது. வழக்கு காசோலைக்கு உண்டான பணத்தை புகார்தாரரிடம் 2 தவணைகளாக பெற்றுக்கொண்டுதான் வழக்கு காசோலையை கையொப்பம் இட்டு கொடுத்தேன் என்று சொன்னால், சரியல்ல. இவ்வழக்கிற்கும் முத்துவிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், புகார்தாரரை ஏமாற்றவேண்டும் என்ற நோக்கில் முத்து-வை இவ்வழக்கில் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால், சரிய்லல.

6. என் கட்சிப்படி நான் புகார்தாரரிடம் பணம் பெறவில்லை என்றும், அதற்கு காசோலை கொடுக்கவில்லை என்று இருந்தால் நான் புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு அனுப்பியிருப்பேன் என்று சொன்னால், நான் புகார்தாரரை தொடர்பு கொண்டு பேசினேன்.

7. இவ்வழக்கு காசோலையானது signature differs என்ற காரணத்திற்காக திருப்பப்படவில்லை என்று சொன்னால், எனக்கு தெரியாது. நான் புகார்தாரரிடம் பெற்ற கடனை கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால், இல்லை.

8. **வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்ற நோக்கில் தான்** EX-P1 **ஐ** Forensic Experts **க்கு அனுப்பவேண்டும் என்று கூறியுள்ளேன் என்றால், சரியல்ல.**

**முடிக்கப்பட்ட நேரம் 01.20 PM**

**புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், (நடுவர் நிலை)
பட்டுக்கோட்டை.